# தேங்காய் மற்றும் கொப்பரை விலை நிலையாக இருக்கும்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டமானது, தேங்காய் மற்றும் கொப்பரைக்கான விலை முன்னறிவிப்பை உருவாக்கியுள்ளது.

வேளாண் மற்றும் விவசாய நல அமைச்சகத்தின் இரண்டாவது முன் கூட்டிய மதிப்பீட்டின் படி, 2021– 2022 ஆம் ஆண்டு இந்தியாவில், தோட்டப்பயிர்களில் தென்னை சாகுபடி 51 சதவீத பரப்பு பங்களிப்புடன் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டில், மொத்த தோட்டப்பயிர்களில் 68 சதவீத பரப்பில் தேங்காய் சாகுபடி செய்யபடுகிறது. தமிழ்நாடு மாநிலமானது மொத்த தேங்காய் உற்பத்தியில் இரண்டாவது இடத்தையும், உற்பத்தி திறனில் எக்டருக்கு 7.90 டன்கள் உற்பத்தி செய்து இரண்டாம் இடத்தை வகுக்கிறது. ஆந்திர பிரதேசம், கர்நாடக மற்றும் கேரளாவின் உற்பத்தி திறன் முறையே 10.46 டன்கள், 7.30 டன்கள் மற்றும் 4.31 டன்கள் காய்களாகும்.

தமிழ்நாட்டில், தேங்காய் 4.44 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 35.15 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கோயம்புத்தூர், திருப்பூர், தஞ்சாவூர், திண்டுக்கல் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் தேங்காய் அதிகளவு பயிரிடப்படுகின்றது. தற்போது, பெருந்துறை சந்தைக்கு கிருஷ்ணகிரி, தர்மபுரி, பொள்ளாச்சி,சேலம் மற்றும் காங்கயம் ஆகிய பகுதிகளிலிருந்து வருகிறது.

வர்த்தக மூலகங்களின் படி, வரும் மாதங்களில் வர கூடிய பண்டிகை காலம் உள்நாட்டு சந்தையில் தேங்காயின் தேவையை அதிகரிக்கும். ஆனால் நடப்பு பருவத்தின் அதிக உற்பத்தி தேங்காயின் விலையை நிலையாக வைக்கும். தேங்காய் அதிகளவு உற்பத்தி செய்யும் மாநிலங்களிலிருந்து வரும்

மிகுந்த வரத்தானது பண்டிகை காலங்களின் நிலவும் விலை உயர்வை சமன்படுத்தி நிலையாக வைத்து இருக்கும்.

விலை முன்னறிவிப்புத் திட்ட குழு, கடந்த 15 ஆண்டுகளாக ஈரோட்டில் உள்ள அவல் பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மற்றும் பெருந்துறை வேளாண் உற்பத்தி கூட்டுறவு மையத்திலும் நிலவிய தேங்காய் மற்றும் கொப்பரையின் விலை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், அக்டோபர்– டிசம்பர் 2022 வரை தரமான தேங்காயின் பண்ணை விலை ரூ.13 முதல் 14 வரை இருக்கும் மற்றும் தரமான கொப்பரையின் பண்ணை விலை ரூ.77 முதல் ரூ.80 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

1. உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
   வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
   தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
   கோயம்புத்தூர் 641003
   தொலைபேசி : 0422–2431405

2. இயக்குனர் மற்றும் முனை அதிகாரி
   தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்
   நீர் தொழில்நுட்ப மையம்
   தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
   கோயம்புத்தூர் 641003
   தொலைபேசி : 0422–6611278

**தொழில்நுட்பவிவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசியார் மற்றும் தலைவர்
காய்கறிப் பயிர்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் 641003
தொலைபேசி : 0422–6611374

## Coconut and Copra Price will be Static

The TN-IAM Project funded Price Forecasting Scheme of the Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University, Coimbatore has developed market advisory for coconut and copra.

According to the Second Advance Estimates of Ministry of Agriculture and Farmers Welfare (2021-22) in India, coconut accounted for 51 per cent of total plantation crops and Tamil Nadu accounted 68 per cent of area under coconut of total plantation crops. Tamil Nadu stands second in the country in terms of coconut production and second in productivity of 7.90 tonnes of nut per hectare compared to Andhra Pradesh (10.46 tonnes of nut per hectare) Karnataka (7.30 tonnes of nut per hectare) and Kerala (4.31 tonnes of nut per hectare).

Tamil Nadu state produced 35.15 lakh tones coconuts from the cultivable area of 4.44 lakh hectares in 2021-22. In Tamil Nadu, the major coconut growing districts are Coimbatore, Tiruppur, Thanjavur, Dindigul and Kanyakumari. The arrivals of copra to Perundurai market are from Krishnagiri, Dharmapuri, Pollachi, Salem and Kangayam.

As per trade sources, festival season in forthcoming months will enhance the demand for coconut in domestic market but the surplus production in the current season will stabilize coconut price. Enhanced supply in the major coconut producing states will pull down the festive demand in coming months.

Price Forecasting Scheme team has analyzed the past 15 year's prices for coconut and copra that prevailed at Avalpoonthurai Regulated Market of Erode district and Perundurai Cooperative Marketing Society. As per the results of the analysis, the price of good quality coconut during October-December, 2022 will be Rs. 13-14 per nut. Good quality copra price will be around Rs. 77-80 per kg. Hence, farmers are advised to take selling decision accordingly.

***For further details contact***

*Domestic and Export Market Intelligence Cell*
*Centre for Agricultural and Rural Development Studies*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore – 641 003.*
*Phone: 0422-2431405*

*The Director and TN-IAMP Nodal Officer*
*Water Technology Centre*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone: 0422-6611278*

***For technical details please contact***

*Professor and Head*
*Department of Spices & Plantation Crops*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore -641003.*
*Phone -0422 -6611284*